செ.வெ.எண்: 04 நாள்:02.03.2017

**பொதுமக்கள் அனைவரும் கைகளை நன்றாக தேய்த்து கழுவுவதன் மூலம் 60 சதவீதம் நோய்கள் வருவதை தடுக்க முடியும் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் அரசு மருத்துவமனையில் கை கழுவுதல் விழிப்புணர்வு மற்றும் செயல்முறை விளக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் 01.03.2017 அன்று பார்வையிட்டார்.

இந்த கைகழுவுதல் விழிப்புணர்வு மற்றும் செயல்முறை விளக்கத்தினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு கூறியதாவது:

உலகம் முழுவதும் இன்னைய காலத்தில் இறக்கும் குழந்தைகளில் 3ல் இருவர் வயிற்றுப்போக்கு மற்றும் சுவாசநோய் பாதிக்கப்பட்டு இறக்கிறார்கள். இதற்கு காரணம் பாக்டீரியா, வைரஸ்கள் மற்றும் ஒட்டுண்ணிகள் கை கழுவாமல் வாய் மூலம் உடலுக்குள் நுழைவதே ஆகும். இதன் மூலம் வாந்தி, வயிற்றுப்போக்கு, பன்றிக்காய்ச்சல், மஞ்சள் காமாலை, டைபாய்டு காய்ச்சல்கள் மற்றும் சீதபேதி போன்ற நோய்கள் வராமல் தடுக்க கை கழுவுதல் மிகவும் முக்கியமாகும். பன்றிக்காய்ச்சல் என்பது பன்றியிலிருந்து பரவுவது இல்லை. மனிதன் இருமல் மற்றும் தும்மலின் போது வெளியேறும் நீர்த்திவளைகள் மூலம் எச்.1.என்.1 வைரஸ் கிருமி காற்றில் பரவுகிறது. இந்த தொற்று ஏற்படாமல் தடுக்க கைகளை அடிக்கடி சோப்பு போட்டு நன்கு கழுவ வேண்டும். வீட்டிலிருந்து பள்ளி, அலுவலகம் உள்ளிட்ட பணியிடங்களுக்கு சென்றவுடனும், அதே போல் வீட்டிற்கு திரும்பிய உடனும் சோப்பு போட்டு கைகளை கழுவ வேண்டும். சரியாக கை கழுவுவதற்கு 7 முறைகள் உள்ளன. சுத்தமான தண்ணீரில் சோப்பு கொண்டு ஒவ்வொரு விரல்களால் முதலில் கழுவி நகக்கண்கள், விரல் இடுக்குகளில் தேய்த்து கழுவி உள்ளங்கை, பின்பக்க கை உள்ளிட்டவைகளுடன் மணிக்கட்டு முதல் முழங்கை வரை நன்றாக கழுவி சுத்தமான துண்டில் துடைத்துக்கொள்ள வேண்டும்.

இதே போன்று சரியான முறையில் கை கழுவும் முறையை, மலம், ஜலம் கழித்த பிறகும், பல் துலக்கிய பிறகும், சாப்பாட்டிற்கு முன், பின் மற்றும் விளையாடி முடித்த பிறகும் கைகளை ஒவ்வொரு முறையும் 30 வினாடிகளாவது கை கழுவுவதற்கு எடுத்துக்கொண்டு கைகளை நன்றாக தேய்த்து கழுவுவதன் மூலம் 60 சதவீதம் நோய்கள் வருவதை தடுக்க முடியும். மேலும் அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காய்ச்சல் உள்ளிட்ட அனைத்து நோய்களுக்கும் போதுமான மருந்து கையிருப்பில் உள்ளதுடன் தேவையான சிகிச்சைகளும் சிறப்பாக அளிக்கப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெறுவதுடன் பெரும்பாலான நோய்களை தவிர்க்கும் வகையில் கை கழுவுதல் குறித்து உரிய விழிப்புணர்வை பெற்றிட வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள்கூறினார்.

முன்னதாக இலுப்பூர் அரசு மருத்துவமனையில் ஆராய்ச்சி மருத்துவர் மரு.சுபாஷ்காந்தி அவர்கள் கை கழுவுதல் விழிப்புணர்வு மற்றும் செயல்முறை விளக்கம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி,இணை இயக்குநர் (ஊரகநலப்பணிகள்) மரு.ஷம்சாத்பேகம், வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் தலைவர் திரு.இரா.சின்னத்தம்பி, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.பி.சாம்பசிவம், முன்னாள் பேரூராட்சித்தலைவர் திரு.குருபாபு, முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**